
# ராகுல சாங்கிருத்தியாயன்

## வாழ்க்கைக் குறிப்பு



# ராகுல சாங்கிருத்யாயன் (ராகுல்ஜி)

## வாழ்க்கைக் குறிப்பு

ஆர். பார்த்தசாரதி

இந்திய நாட்டின்
தலைசிறந்த சிந்தனையாளர்களில் மிக உயர்ந்தவர்

ஊர் சுற்றுவதிலும்
கலைச் செல்வங்களையும் அறிவையும் தேடுவதிலும்
மக்களை நேசிப்பதிலும் ஈடிணையற்றவர்

பன்மொழிப்புலவர்

சிறுகதையாளர்

நாவலாசிரியர்

வரலாற்று ஆய்வாளர்

தத்துவஞானி

அறிவுக்கடல்

மக்களியக்கப் படைப்பாளர்

கம்யூனிஸ்டு

இந்திய நாட்டின் விடுதலை வரலாற்றில் அழியா
இடம் பெற்றவர்.

## பிறப்பு

புகழோடு பிறந்தவர் அல்லர் ராகுல். விடாமுயற்சியாலும் கடும் உழைப்பாலும் இமயமென உயர்ந்து செம்மாந்து நின்றவர். உத்தரப் பிரதேசத்தில் அசம்கார் மாவட்டத்தில் பன்டகா என்னுமிடத்தில் 1893 ஏப்ரல், 9 ஆம் நாள் தோன்றினார். தந்தையார் கோவர்தன் பாண்டே. பிள்ளைப் பெயர் கேதார்நாத். குலம் வைதிக பிராமண குலம்.

## பால்ய விவாகம்

பன்னிரண்டாம் வயதில், பள்ளிப் பருவத்தில், அக்கால வழக்கம் போலத் திருமணம் நடந்தேறியது. குடும்ப நிலை காரணமாக வேலை தேடி வீட்டை விட்டுக் கல்கத்தாவுக்கு ஓடி விட்டார்.

## மொழிப் பயிற்சி

அங்கு வங்க மொழி கற்றார். பின்னர் தேவப்பிரயாகை, கங்கோத்திரி, கேதார்நாத் என்னுமிடங்களில் சமஸ்கிருத மொழி பயின்றார். பார்கா வைணவ மடத்தின் தலைவரான மகந்தின் சீடராகி இந்தி, சமஸ்கிருத மொழிகளில் வல்லவரானார். வைணவரானபின் பெயர் பாபா ராமோதர் தாஸ் என மாறிற்று.

## தமிழகம் வந்தார்

பின்னர் வைணவம் பற்றி அறியவும் சமஸ்கிருதத்தில் பாண்டியத்துவம் பெறவும் தமிழகம் நண்ணி கூரம், திருமழிசை,

மதுராந்தகம், ஸ்ரீபெரும்பூதூர் என்னுமிடங்களில் வாழ்ந்த வைணவப் பெரியார்கள்பாலணுகிக் கற்றார்.

## விடுதலை வேட்கை, சிறை வாழ்க்கை

அறிவை நாடிச் சென்ற ராமோதருக்கு மகத்தான அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சி புதுச் செய்திகளையும் புதுக் கண்ணோட்டத்தையும் தந்தது. அறிவுத்தாகம் ஒரு புறம்; நாட்டு விடுதலை வேட்கை மறுபுறம். பல்லாயிரக்கணக்கான மக்கள் வறுமையிலும் நோய் நொடிகளிலும் உழன்று வாடித் துடிப்பதுணர்ந்து நாட்டு அடிமைத்தளையொடிக்கத் துணிவு பூண்டு காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டார். இதன் பலனாக 1922 ஆம் ஆண்டில் ஆறு மாத சிறைத் தண்டனை பெற்றார். விடுதலை பெற்று வெளிவந்ததும் சப்ரா மாவட்டக் காங்கிரஸ் தலைவரானார். அடுத்து ஈராண்டு சிறைத் தண்டனையும் காத்திருந்தது.

## பவுத்தத்தில் ஈடுபாடு

சிறையிலும் கற்றார். வைணவம் கண்ட இறை வழிபாடு, அவதாரக் கொள்கை ஆகியவற்றில் இவர் மனம் ஈடுபாடு கொள்ளவில்லை. சிறை வாழ்க்கையின்போது பவுத்தம் பற்றிய நூல்களைப் பயின்றார். பவுத்த சமயக் கொள்கைகள் இவரை ஈர்த்தன.

சிறையிலிருந்து விடுதலை பெற்று வெளிவந்ததும் பவுத்தம் பற்றிய நுண்ணறிவு பெறவிழைந்து இலங்கை சென்றார். இடையில் மார்க்ஸ்-எங்கெல்ஸ் இயற்றிய 'கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை'யை இந்தியில் மொழிபெயர்த்தார். இலங்கையில் பவுத்த சமயச் சான்றோர் அவரது பேரறிவை வியந்து "திரபிடகாசார்ய மகா பண்டிதர் ராகுல் சாங்கிருத்தியாயன்" என்னும் விருதுப் பெயரை வழங்கினர். இதுவே அவர் வாழ்நாள் முழுவதும் நிலைத்திருந்தது.

## மறைந்த பவுத்த இலக்கியங்களை தேடிச் சேகரித்தல்

இலங்கையிலிருந்து இந்தியா மீண்டபின் பவுத்த நூல்கள் சேகரிக்க நேபாளம், திபெத் ஆகிய நாடுகளுக்குச் சென்றார். பவுத்தத்தின் பிறப்பிடமான இந்தியாவில் காணக்கிடைக்காத பவுத்த சமய இலக்கியங்கள் பல திபெத்தில் திபெத் மொழியிலும் சமஸ்கிருத மொழியிலும் இருக்கக் கண்டார். 1930 இல் 22 மட்டக் குதிரைகள் மூலச் சுவடிகளைச் சுமந்து இந்தியா வந்தன. இவ்வாறு ராகுல் கொணர்ந்த சுவடிகளில் பல புகழ் பெற்றவை. வஜ்ரதகதந்திரம், சத்தர்மபுண்டர்கம் பிரமாண வார்த்திகம் என்னும் பவுத்த மூலநூல்கள் கிடைத்தன. பவுத்தம் புதுப் பொலிவையும் புத்தாராய்ச்சியையும் பெற்றது. இந்திய நாகரிகத்துக்குப் பவுத்தம் ஆற்றிய பெருந்தொண்டு பற்றிய ஆராய்ச்சிகள் இங்கிருந்துதான் தொடங்குகின்றன.

## எழுதிக் குவித்தார்

பவுத்த சமயப் பேராசான்களான நாகர்ஜுனர், அசங்கர், வசுபந்து, பவ்வியர், தருமகீர்த்தி, ஞானஸ்ரீ, ஜிதாரி, தாரநாதர் ஆகியோரது சமய-தருக்க (நியாய) நூல்களைப் பதிப்பித்தார். பாலி திரிபிடகங்களை இந்தியில் மொழிபெயர்த்தார். புத்தர் வாழ்க்கை பற்றிய நூல் எழுதினார். பாரசீகம், திபெத்தியம், உருது ஆகிய மொழிகளிலும் வல்லவரானார். இவருடைய கட்டுரைகள் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு வெளி வந்துள்ளன.

## கலைச் செல்வங்களைக் கொணர்ந்திங்கு சேர்த்தல்

வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பிய போதெல்லாம் உடன் கொண்டு வந்த கலைச் செல்வங்கள் அனைத்தையும் பாட்னா அருங்கலையகத்தில் சேர்த்தார். மூல இலக்கியங்களைத் தேடி மஞ்சூரியா, கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்தார். கண்ட உண்மைகளை அறிஞர் உலகுக்கு அறிவிக்க மேலை நாடுகளுக்கும் பயணம் மேற்கொண்டார். ஆற்றிய சொற்பொழிவுகள் பல ஆங்கிலத்திலும், பிரெஞ்சு மொழியிலும்

வெளிவந்தன. லண்டனில் தங்கி இருந்தபோது பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சியின் நாள் தாளான ''டெய்லி ஒர்க்கர்'' தொடர்பு கிடைத்தது. கம்யூனிச தத்துவத்தின் முதல்வரான கார்ல் மார்க்ஸ் கல்லறைக்குச் சென்று மரியாதை செலுத்தினார்.

## மார்க்சியத்தை ஏற்றார்

பவுத்தப் பயிற்சி அவரை இயல்பாகவே மார்க்சியத்தின்பால் கொண்டு செலுத்திற்று. 1935 ஆம் ஆண்டு சோவியத் நாடு சென்றார். தத்துவஞானப் பயிற்சியும் விடுதலை வேட்கையும், அமைப்புக்களோடுகொண்ட தொடர்பும் இடைவிடாத போராட்டமும் விஞ்ஞான சோஷலிசமே மனித சமூகத்தைக் கடைத்தேற்ற உறுதியான வழி எனக்காணத் துணை செய்தன. எனவே கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினரானார்.

## சிறைச்சாலையைக் கல்விச்சாலையாக்கினார்

பல ஆண்டுகள் சிறை வாழ்க்கை மேற்கொண்ட காலத்தில் இந்தியில் பல நூல்கள் இயற்றினார். விஸ்வகிருப்ரேகா, மானவ் சமாஜ், தர்சன்-திக்-தர்சன், விஞ்ஞான பௌதிகவாத், சிம்ம சேனாபதி, வால்கா-சே-கங்கா என்னும் நூல்கள் தலை சிறந்தவை. 1942 இல் சிறையிலிருந்து வெளிவந்த பின் மக்கள் இயக்கங்களுடன் தொடர்பு கொண்டு பல போராட்டங்களை நடத்தினார். உழவர் பிரச்சினைகளில் இவருக்கு ஈடுபாடு அதிகம்.

## லெனின்கிராடு பல்கலைக் கழகத்தில் பேராசிரியர்

லெனின் கிராடு பல்கலைக் கழகம் இவர் புலமையை அறிந்து 1945 ஆம் ஆண்டில் சமஸ்கிருதப் பேராசிரியராக நியமித்தது. இரண்டரை ஆண்டுக்காலம் பதவி வகித்தார். அவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு மத்திய ஆசிய மொழிகள் சிலவற்றைப் பயின்றதனோடு அந்நிலப் பகுதியின் விரிந்த வரலாறொன்று

இயற்றவேண்டிச் சான்றாதாரங்களைத் திரட்டினார். இப்பணி இவரைத் தொல்பொருளாராய்ச்சி, தொல்லெழுத்தியல் என்னும் துறைகளில் வல்லுநராக்கிற்று.

## மொழிப்புலமை

பெருமொழிகள் மட்டுமில்லாமல் சில மொழிகளின் கிளை மொழிகளும் இவருக்குத் தெரியும். கிளை மொழியில் சில நாடகங்களும் வரைந்துள்ளார். இவர் எழுதிய சமஸ்கிருத நூல்களின் நடை மிக எளிமையானது. இந்தி அகர வரிசையும், திபெத்-சமஸ்கிருத அகரவரிசையும் தொகுத்தார். சுற்றித் திரிந்த ஊர்கள், நகரங்கள் பற்றிய வரலாறுகளையும் எழுதினார்.

## வரலாற்றாய்வாளர்

பிற்காலத்தில் அவர் இயற்றிய மத்திய ஆசிய வரலாறு வரலாற்றாளர்க்கு அருவிருந்து. மக்கள் அரசு ஆட்சியிலமர்ந்தபின் சீனாவுக்குச் சென்றுவந்து அங்குத் தாம் கண்டவற்றையும், கேட்டவற்றையும் நூல்களாக வடித்தார்.

## ராமராஜ்யமா மார்க்சியமா?

கரப்பாத்திரிஎன்னும்இந்துவெறியர் மார்க்சியம்-லெனினியம் இந்திய நாட்டுக்கு ஒவ்வாதது என்று வலியுறுத்திப் பெரு நூலொன்று எழுதினார். அவருடைய ராமராஜ்யம் போலித் தனமானது என்று எடுத்துக்காட்டி எவ்வளவு முயன்றாலும் இராமாயண காலம் திரும்ப வராது,வருவது சோஷலிசமே என்று ராகுல் நிலை நாட்டினார். கரப்பாத்ரியின் நூல் மார்க்சியமும் ராமராஜ்யமும் என்பது. ராகுல்ஜியின் கண்டன நூல் "ராமராஜ்யமும் மார்க்சியமும்".

## இலங்கையில் பேராசிரியர்

ராகுல் 1959 செப்டம்பரில் இலங்கை கெலனியப் பல்கலைக் கழகத்தில் மெய்ப்பொருளியல் பேராசிரியராக நியமனம் பெற்றார். இக்காலத்தில் திபெத்-இந்தி அகரவரிசை, பாலி கர்வியவீர் புருஷ் என்னும் நூல்கள் எழுதினார்.

## தாய்மொழிப் பற்று

பல மொழிகள் தெரிந்திருந்தும் சில மொழிகளில் கரை கண்டிருந்தும் ராகுல் தம் தாய்மொழியாம் இந்தியிலேயே பெரும்பாலான நூல்களை எழுதினார்.

## சிறந்த நூல்கள்

இந்தி, சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகள்பற்றி அவர் எழுதிய மொழி வரலாற்று நூல்கள் தலை சிறந்தவை. சிறுகதைகளும் கட்டுரைகளும் ஐந்து தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. 'ராஜபுதன அந்தப்புரத்து ரகசியங்கள்', 'சிந்து முதல் கங்கை வரை', 'சிம்ம சேனாபதி', 'வால்கா முதல் கங்கை வரை' என்னும் நூல்கள் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு வெளி வந்துள்ளன. குறிப்பாக ''வால்கா முதல் கங்கை வரை'' என்னும் நூல் பதினான்கு மொழிகளில் வெளிவந்துள்ளது. உலகப் புகழ் பெற்ற இந்நூல் மனித சமூக வரலாற்றை விஞ்ஞான வழி தொகுத்துக் கூறுகிறது.

## குடும்ப வாழ்க்கை

ராகுல் முதல் திருமணம் இளம் பருவத்தில் நடைபெற்றதனால் அதனை அவர் ஒப்பவில்லை. அது தோல்வியில் முடிந்தது. சோவியத் நாட்டில் இருந்தபோது லோலா என்னும் ரஷ்யப் பெண்மணியை மணந்தார். இகோர் என்னும் மகன் பிறந்தான். பின்னர் தமது செயலாளராக நெடுங்காலம் பணியாற்றிய

கமலாபரியார் என்னும் அம்மையாரை மனைவியாக ஏற்றார். மகளும், மகனும் பிறந்தனர்.

## கம்யூனிஸ்டு

வாழ்நாள் முழுவதும் கற்றும், நூலெழுதியும் மக்கள் நலம் பேணித் தொண்டாற்றியும் வந்த ராகுல் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினராகி உயர்ந்தார். அனைத்திந்தியக் கிசான் சபையின் முக்கியத் தலைவர்களிலொருவராக இலங்கினார். இந்தி மொழியின் நிலைகுறித்து அவருக்கும் கட்சிக்கும் ஒரு காலத்தில் வேறுபாடு தோன்றிற்று. இதனால் கட்சியை விட்டு விலகினார். விலகும்போது மனவேதனை தாங்க முடியவில்லை என்றும் சேய்மையிலிருந்தாலும் கட்சி காட்டும்வழியில்லாது வேறுவழியில் கொள்கைகளை நிறைவேற்ற முடியாது என்றும் அறிக்கை விட்டார். சில ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் கட்சி உறுப்பினரானார்.

## விருதுகளும் பட்டங்களும் பெருமை பெற்றன

சாகித்ய அகாதமி பரிசும், இந்திய அரசு "பத்ம பூஷன்" விருதும், காசி பண்டித சபை "மகா பண்டிதர்" என்னும் பட்டமும் வழங்கின, பெருமை பெற்றன.

## மறைவு

ராகுல் 1962, டிசம்பர் 8 அன்று நோய்வாய்ப்பட்டார். பதினைந்து மாதங்கள் சோவியத் நாட்டில் சிகிச்சை பெற்று 1963, ஏப்ரல் 9 அன்று நாடு திரும்பினார். ஐந்து நாட்கள் கழித்து 14-ந் தேதி அன்று இயற்கை எய்தினார்.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென் னாற்றுங் கொல்லோ உலகு".

## நியூ செஞ்சுரி வெளியிட்ட
## ராகுல்ஜியின் நூல்கள்

*சிந்து முதல் கங்கை வரை*

| | | |
|---|---|---|
| *ராகுல் சாங்கிருத்தியாயன் சுயசரிதை* | | *—பாலியப் பருவம்* |
| ,, | ,, | *—வாலிபப் பருவம்* |
| ,, | ,, | *—அரசியல் நுழைவு* |
| ,, | ,, | *—புதிய ஒளி* |

*ஊர் சுற்றிப்புராணம்*

*ராமராஜ்யமும் மார்க்ஸீயமும்*

### ராகுல்ஜியின் தத்துவ இயல் வரிசை

**இந்து தத்துவ இயல்**
**பவுத்த தத்துவ இயல்**
**இஸ்லாமிய தத்துவ இயல்**
**ஐரோப்பிய தத்துவ இயல்**
**விஞ்ஞான லோகாயதவாதம்**

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட்.,
41-பி, சிட்கோ எஸ்டேட், சென்னை-98.

கிளைகள்:

136, அண்ணாசாலை, சென்னை-600 002.

80, மேலக் கோபுரத் தெரு,
மதுரை-625 001.

3 & 4, நேரு ஸ்டேடியம்,
கோவை-641 018.

42/7, சிங்காரத்தோப்பு,
திருச்சி-620 008.

செர்ரி ரோடு,
சேலம்-636 001.

விற்பனை நிலையங்கள்:

பஸ் நிலையம்
திருநெல்வேலி-627 001.

சேரிங் கிராஸ்,
ஊட்டி-643 001

மெயின் ரோடு,
திண்டுக்கல்-624 001.

87/89, ஒப்பணக்காரத் தெரு,
கோவை-641 001.

பஸ் நிலையம், சேலம்-636 001.

இயங்கும் நூல் விற்பனை நிலையங்கள்:

பாரதி

பாவேந்தர்.